N. Asokan
Secretary & Senior Research Fellow

No.5. Kavignar Puduvai Sivam St
Venkata Nagar Extension
Pondicherry 605 011 INDIA
Ph: off: (413) 2213758, 2212443, 2211592
Mobile : 94432 21770
Res: (413) 2211710, 2212778
Fax:(413)2212338
e-mail:ashokmirra@gmail.com;motherssindia@gmail.com

# The Mother's Service Society

26 / 12 / 14

## தனித்தன்மையும் அதற்குரிய அடையாளங்களும்

இப்பொழுது நான் பேச எடுத்துக் கொண்டுள்ள தலைப்பு தனித்தன்மையும், அதற்கு அடையாளமாக விளங்கும் குணவிசேஷங்களும் ஆகும். குணவிசேஷங்களைப்பற்றி விவரமாகப் பார்ப்பதற்குமுன் தனித்தன்மை என்றால் என்ன? மனித சமூகத்தில் அது எப்படியெல்லாம் வெளிப்படுகிறது? என்ற பொதுவான விவரங்களைப் பார்ப்போம். தனித்தன்மை என்றால் தனித்திருத்தல் அல்லது தனியாக தெரிதல் என்று நாம் விளக்கம் கொடுக்கலாம். அப்படி தனியாகத் தெரிய வேண்டும் என்றால், அந்தளவிற்கு அவர் வேறுபட்டு நிற்கிறார். அதனால்தான் தனியாகத் தெரிகிறார் என்று அர்த்தமாகிறது. உதாரணமாக நம் ஊரில் எல்லோரும் சுமாரான வசதியோடு இருக்கும்போது ஒருவர் மட்டும் பெரும் பணக்காரராக இருந்தால், அவருடைய வீடு, அவர் வைத்திருக்கும் கார் எல்லாம் அவரை தனித்துக் காட்டும். அம்மாதிரியே ஒரு வகுப்பில் மாணவர்கள் எல்லோரும் சராசரியான அறிவு பெற்றிருக்கும்போது ஒருவன் மட்டும் அபார புத்திசாலியாக இருந்தால், அந்த அபார அறிவு அந்த மாணவனை தனித்துக் காட்டும். ஆகவே தனித்தன்மை என்பதை நாம் வேறுபாடு, வித்தியாசம் என்றும் அர்த்தம் செய்து கொள்ளலாம்.

இறைவனே உலகைப் படைக்கும்போது வேறுபாட்டை விரும்பி படைத்திருக்கிறார் என்று தோன்றுகிறது. உலகில் ஆண்கள் மட்டுமில்லை, பெண்களும் உள்ளனர். வெறும் ஆண்கள்தான் உள்ளனர், பெண்கள் இல்லை என்பதை கற்பனை செய்து பாருங்கள். ஆண்களுக்கு வாழ்க்கை வெறுத்துவிடும். ஆகவே ஆணுக்கு எதிரான அம்சங்கள் கொண்ட பெண்ணும் படைப்பிலிருந்தால்தான் வாழ்க்கை சுவையாக இருக்கும் என்று ஆண்டவனே நினைத்திருக்கிறார்போலும். அப்படியே ஒட்டு மொத்த மானிட இனத்தை எடுத்துக் கொண்டாலும், அனைவரும் ஒரே மாதிரி இருப்பதில்லை. ஐரோப்பியர்கள் வெண்மையாகவும், ஆப்பிரிக்கர்கள் கரிய நிறமாகவும், இந்தியர்கள் பிரவுன் கலராகவும், சீனர்கள் மஞ்சள் நிறமாகவும் காட்சியளிக்கிறார்கள். உலகில் எங்கு சென்றாலும், எல்லா இடத்திலும் மனிதன் வெண்மையாகவே இருக்கிறான். அல்லது கருப்பாகவே இருக்கிறான் என்றால் வெண்மை நிறத்தின் மேலும், கருமை நிறத்தின் மேலும் வெறுப்பே வந்துவிடும். இவ்வாறு நிறங்கள் எல்லாம் வேறுபட்டே தெரிவதால்தான், வெண்மை நிறத்திற்கு ஒரு மதிப்பு வருகிறது. அப்படி உருவ வேறுபாடுதான் மனித வாழ்க்கையில் இருக்கிறது என்றில்லை. மத, மொழி, கலாச்சார வேறுபாடு என்றிவைகளெல்லாம் இருக்கின்றன. இந்தியாவில் ஜாதி ஏற்றதாழ்வுகள் உள்ளன. ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளில் நாம் அதைப் பார்க்க முடியாது. முகமதிய நாடுகளுக்கு சென்றால், அங்கு பெண்களை வித்தியாசமாக நடத்துவார்கள்.

மனிதர்களுக்குள்ளேயே இவ்வளவு வேறுபாடு உள்ளபோது ஆண்டவனைப்பற்றிய மனிதனுடைய சிந்தனையும் பலவிதமாக வேறுபடுவதைப் பார்க்கிறோம். இந்தியர்கள் பல கடவுள்கள் உண்டு என நம்புகிறார்கள். அதனால் இந்த நாட்டில் சிவ பக்தன், கிருஷ்ண பக்தன், ராம பக்தன், காளி பக்தன் என்று ஆளுக்கொருவிதமான கடவுளை வழிபடுவதைப் பார்க்கிறோம். முகமதியர் மற்றும் கிருத்துவர்களை

எடுத்துக் கொண்டால், கடவுள் ஒருவர்தான் பல கடவுள்கள் என்பதெல்லாம் பொய் என்று பேசுவார்கள். கம்யூனிஸ்ட் கட்சியினரையும், பகுத்தறிவுவாதிகளையும் எடுத்துக் கொண்டால், இந்த உலகம் இயங்குவதற்குக் கடவுளே தேவையில்லை, கடவுள் என்பவனே மனிதன் ஏற்படுத்தியவர்தான், மனிதனின் கற்பனையில்தான் அவர் இருக்கிறாரே தவிர அவன் கற்பனையைத் தாண்டி அவரில்லை என்பார்கள். இப்படியாக நாம் பார்த்துக் கொண்டேயிருந்தால், எண்ணற்ற வகையில் மானிட கலாச்சாரம் வேற்றுமையை வளர்த்து கொண்டுள்ளது. ஆகவே தனித்தன்மையின் பிரதான அடையாளமே வேறுபட்டிருத்தலாகும்.

சமூகத்தில் இப்படி வேறுபாட்டை வெளிப்படுத்துபவர்கள் முக்கியமாக ஒரு நாலைந்து விஷயங்களில்தான் தங்களுடைய வேறுபாட்டை அதிகமாக வெளிக்காட்டுவார்கள். சமூகத்தில் ஒரேமாதிரியாக காட்சியளிக்கின்ற சராசரி மனிதர்கள் 90% என்று வைத்துக் கொள்ளலாம். இந்தியர்கள் 10% தான் வேறுபட்டு காட்சிளிப்பார்கள். அந்த வேறுபாடு அவர்களுடைய orginality, தன்னம்பிக்கை மற்றும் தன்னைச் சார்ந்திருத்தல், unconventional behaviour, அடுத்தவர் விமர்சனங்களை மதிக்காமல் இருத்தல் , சொந்த முடிவுகளில் திடமாக இருத்தல் , தலைமை தாங்கி அடுத்தவரை வழிநடத்துதல் என்றெல்லாம் வெளிப்படும். அதாவது மேற்சொன்ன குணவிசேஷங்களில் ஏதேனும் ஒன்று ஒருவரிடம் வெளிப்பட்டாலும் அவர் தனித்தன்மை மிகுந்தவர் என்று நாம் புரிந்து கொள்ளலாம் . இவற்றுள் பிரதானமான originality-க்கு வருவோம்.

**Originality**-யை நாம் பல இடங்களில் பல்வேறு ரூபங்களில் சந்திக்கிறோம் . அதுவொரு புதிய idea-வாக வெளிப்படலாம் . அதற்கும்மேல் போய் புதிய கண்டுபிடிப்பாகவும் வெளிவரலாம் . புதிய சமூக அமைப்பாகவும் அது இருக்கலாம் . மேலும் எல்லோருக்கும் தெரிந்த விஷயமாக இருந்தாலும் முதன்முதலாக இவர்தான் எடுத்துச் செய்தார் என்றும் வரலாம் . புதிய idea என்றால், மனிதன் குரங்கிலிருந்து பிறந்தவன் என்ற புரட்சிகரமான ஒரு கருத்தை டார்வின்தான் முதன்முதலாகச் சொன்னார். நாமெல்லாம் குரங்கைப் பார்க்கும்போது மனிதனைப்போல் கண் , மூக்கு, காதுகள் எல்லாம் உள்ளனவே என்று தோன்றத்தான் செய்கிறது. அதிகபட்சமாக மனிதனும் குரங்கும் ஒன்றாக உள்ளனர் என்று நமக்குச் சொல்லத் தோன்றுகிறது . இதற்குமேல் நம் சிந்தனை ஓடுவதில்லை . இந்த இடத்தில்தான் டார்வின் நம்மிடத்திலிருந்து வேறுபட்டிருக்கிறார். உருவ ஒற்றுமையை கவனித்த அவர் அடுத்த கட்டமாக சிந்திக்க ஆரம்பித்தார். குரங்கும், மனிதனும் ஒரேமாதிரி இருக்கின்றனர் என்றால் , ஏன் குரங்கிலிருந்து மனிதன் பிறந்திருக்கக் கூடாது, இப்படித்தான் அவர் சிந்தனை original-ஆக எழுந்தது. நூறு ஆண்டுகளுக்கு மேலாக இந்த சிந்தனை உலகில் பரவியிருப்பதால், இன்று இது நமக்கு அவ்வளவு புரட்சிகரமாகத் தெரியவில்லை. ஆனால் டார்வின் வாழ்ந்த காலத்தில் ஆண்டவனே நேரடியாக மனிதனை பொம்மையாகப் படைத்தான் என்றும் அந்த பொம்மையின் வாயில் ஊதி மூச்சுக்காற்றை உருவாக்கி சுவாசத்தை உண்டு பண்ணினார் என்றும் பைபிளில் சொல்லப்பட்டதை பரவலாக நம்பிக் கொண்டிருந்தார்கள் . அதனால் டார்வின் அப்படி நினைக்காமல் வேறுவிதமாக நினைத்தது புரட்சிகரமாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

புதியதாக ஒரு எண்ணம் உருவாவது originality என்றால், புதியதோர் சமுதாயக் கொள்கையையே உருவாக்குபவர்களும் உள்ளார்கள். அதையும் நாம் originality-க்கு அடையாளமாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். சோஷலிச கொள்கைகள் 1800-ஆம் ஆண்டுகளிலிருந்தே ஐரோப்பாவில் பிரபலமாகப் பரவி இருந்தன. ஆனால் அவற்றிற்கு முறையான ஒரு விளக்கம் கொடுத்து சோஷலிஷத்தை தவிர்க்க முடியாது, முதலாளித்துவத்தை அடுத்து வரப்போவது சோஷலிசம்தான், அது புரட்சியால்தான் வரும் , முதலாளித்துவம் (Capitalism) நிலையானதில்லை, இதன் ஆயுட்காலம் முடியும் நேரம் வந்துவிட்டது என்றெல்லாம் விளக்கம் கொடுத்து சோஷலிசத்தைவிட உயர்ந்த கொள்கையாக கம்யூனிசத்தை

அறிமுகப்படுத்தியவர் காரல்மார்க்ஸ் அவர்கள் . அவர் கம்யூனிசத்தை ஆதரித்ததால் , தனித்தன்மை அற்றவர் என்று நினைக்கத் தோன்றும் . ஆனால் அவர் உண்மையில் தனித்தன்மையை மிகவும் வலியுறுத்தியவர். முதலாளித்துவ பொருளாதார முறையில், உழைக்கும் வர்க்கத்தினரின் உரிமைகள் பறிக்கப்படுவதால் அதைத் தவிர்க்க கம்யூனிச பொருளாதார முறைக்கு மாறினால் , உழைக்கும் வர்கத்தினரின் தனிப்பட்ட உரிமைகள் பாதுகாக்கப்படும் என்பதால்தான் கம்யூனிசத்தை ஆதரித்தார் என்று தெரிகிறது.

தனித்தன்மையை நிரூபிக்க original-லாகத்தான் நாம் சிந்திக்க வேண்டும் என்ற அவசியமில்லை . எல்லோருக்கும் தெரிந்த பல விஷயங்களை எவரும் முன்வந்து செய்வதில்லை . அப்படிப்பட்ட சூழ்நிலையில் நல்ல விஷயத்தை நாம் ஏன் செய்யக்கூடாது என்று முனைந்து செயல்வடிவம் கொடுப்பவர்கள் அந்த வகையில் originality உள்ளவர்களாகத்தான் கொள்ளப்படுவார்கள் . அன்னியனான வெள்ளையன் நம்மை ஆட்சி செய்வது தவறு . அவனிடமிருந்து விடுதலை பெறுவதுதான் நாட்டிற்கு நல்லது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான் . ஆனால் எவருக்கும் வாய்விட்டு அதை உரிமையுடன் கேட்க தைரியமில்லை . அப்படி வாய்விட்டு தைரியமாகக் கேட்டவர் காந்திஜி ஒருவர் மட்டும்தான். சரி கேட்டுவிட்டோம் அதை எப்படி செயல்படுத்துவது என்ற அடுத்த கேள்வியும் வருகிறது . அதற்கும் சத்தியாக்கிரகம் , ஒத்துழையாமை இயக்கம் என்று செயல்வடிவம் கொடுத்தார் . அம்மாதிரியே சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து 1960 வரை நாட்டில் உணவு பற்றாக்குறை இருந்தது . அதன் விளைவாக பஞ்சமும், பட்டினியும் மக்கள் அனுபவித்தார்கள் . ஜனத்தொகை பெருகிவரும் காலத்தில் நாளாக நாளாக இந்த பஞ்சமும் , பட்டினியும் அதிகமாகும் என்பதெல்லாம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான் . இருந்தாலும் மேலை நாடுகளிலிருந்து கோதுமை , அரிசி போன்ற தானியங்களை இறக்குமதி செய்து சமாளித்துக் கொள்ளலாம் என்றுதான் ஆட்சி பொறுப்பிலிருந்தவர்கள் நினைத்தார்களே தவிர நம் நாட்டிலேயே பற்றாக்குறையாக இருக்கும் உணவை உற்பத்தி செய்து கொள்ளலாம், மேலை நாட்டு அரசிடம் கையேந்ததேவை இல்லை என்று முதன்முதலில் வெளிப்படையாகப் பேசியவர் காலஞ்சென்ற மத்திய உணவு அமைச்சர் சி . சுப்பிரமணியம் அவர்கள்தான் . அதாவது அவருடைய originality மேலை நாடுகளுடைய தயவை எதிர்பார்க்காமல் நம் சொந்த காலிலேயே நிற்போம் என்று பேசியதில்தான் இருக்கிறது. அந்த விஷயத்தில் அவர் முன்னோடியாகத்தான் செயல்பட்டார் . அவர் சொல்லியதுடன் நிறுத்திக் கொள்ளாமல் அதை செயல்படுத்தியும் காட்டினார் . அதாவது பசுமை புரட்சி என்ற ஒரு இயக்கத்தை ஆரம்பித்து இயக்கத்திற்கு ஆதரவாக உயர்ரக தானிய விதைகள் உரமூட்டைகள் , பூச்சிக்கொல்லி மருந்துகள், புதியதாக உற்பத்தியாகும் தானிய மூட்டைகளை சேகரித்து வைத்துக் கொள்ள தேவையான உணவு கிடங்குகள் , மூட்டைகளை எல்லா இடத்திற்கும் கொண்டு செல்ல தேவையான லாரிகள், minimum floor price என்று எல்லாவற்றையும் கொண்டுவந்து பசுமை புரட்சி வெறும் பேச்சில்லை நிஜம் என்று அவர் மாற்றிக் காட்டினார் . மறைந்த தலைவர் காமராஜர் அவர்களும் அப்படி முன்னேற்றத்திற்கு செயல்வடிவம் கொடுப்பதில் மிகுந்த originality உள்ளவர். இந்திய மக்கள் முன்னேற எது உதவியாக இருக்கும் என்று நாட்டின் தலைமை விவாதம் செய்து கொண்டிருந்தபோது அவரவருக்குத் தேவையான கல்வியறிவைக் கொடுத்துவிட்டால் , அவரவரும் தன்னைத்தானே முன்னேற்றிக் கொள்வார்கள் என்று அவரொரு யோசனை வழங்கினார் . பள்ளிக்கு பிள்ளைகள் ஒழுங்காக வருவதில்லையே அதற்கு என்ன செய்வது என்று அடுத்த கேள்வி எழுந்தபோது , மதிய உணவு பள்ளியில் வழங்கிவிட்டால் பிள்ளைகள் தவறாமல் வருவார்கள் என்று சொல்லி மதிய உணவு திட்டத்தை தொடங்கி வைத்தவர் அவர்தான் . இம்மாதிரி செய்ய வேண்டிய காரியங்களை முன்வந்து தைரியமாக அமுல்படுத்துபவர்கள் அந்த வகையில் originality உள்ளவர்கள்தான் என்று சொல்லவேண்டும் . அப்படிப் பார்த்தால், பென்ஷன் வாங்கும் அரசு ஊழியர்கள் காலமாகும்போது அந்த பென்ஷன் எல்லாம்

நிறுத்தப்பட்டு வந்தது . பென்ஷன் நிறுத்தப்படுவது காலஞ்சென்றவரின் குடும்பத்தினரை மிகவும் சங்கடத்திற்கு ஆளாக்கியது . இது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாக இருந்தாலும் எவரும் எதுவும் செய்யவில்லை. தி.மு.க. தலைவர் கருணாநிதி அவர்கள்தான் இப்படி விதவையாகிப் போகும் பெண்கள்படும் கஷ்டத்தை உணர்ந்து, அரசு ஊழியர் காலமானாலும், அவருக்கு கொடுக்கப்பட்ட பென்ஷன் அவருடைய மனைவியாகிய விதவைக்கும் வழங்கப்பட வேண்டும் என்றவொரு சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்தார் . அம்மாதிரியே ரயில்வே துறையும் அரசை சேர்ந்ததாக இருந்தாலும் , அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் பென்ஷன் ஏதோவொரு காரணத்தால் ரயில்வே ஊழியர்களுக்கு கிடைக்காமல் இருந்து வந்தது. இதற்காக சிலபேர் சட்டத்திருத்தம் கொண்டுவர முயற்சி செய்தபோது, அது நடைமுறைக்குவர இருபது வருடங்கள்மேல் ஆகியது.

ஏற்கனவே அமலிலுள்ள சர்க்கார் பென்ஷனை ரயில்வே துறைக்கும் நீட்டிக்க முடிந்ததை ரயில்வே துறையிர் நிகழ்த்திய ஒரிஜினல் சாதனையாகத்தான் நாம் நினைக்க வேண்டும் . அது என்னவோ தெரியவில்லை, நம் நாட்டில் எல்லோருக்கும் தெரிந்த விஷயமாக இருந்தாலும் எவரும் எடுத்து செய்ய முன்வருவதில்லை. அப்படி ஒருவர் எடுத்து செய்தால் அவரை ஏதோ ஒரு அதிசய பிறவிபோல் பார்க்கின்றனர். உதாரணமாக இந்தியா சுத்தமாக இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த செய்தி . வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் விமான நிலையத்தைவிட்டு வெளியேறி டாக்ஸி பிடித்து வரும்போதே நம் நாட்டு நெடுஞ்சாலைகள் சுத்தமாக இல்லை என்று உடனே சொல்லிவிடுகிறார்கள் . இதை சொல்லாத வெளிநாட்டு பயணியே இல்லை . சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இது நம் காதில் விழுந்தாலும் , எந்த ஆட்சியும் இதுவரையில் எதையும் செயததில்லை. தற்போதைய பிரதமர் திரு. மோடி அவர்கள்தான் சுவச் பாரத் கிளீன் இந்தியா என்ற சுத்தப்படுத்தும் இயக்கத்தையே துவக்கி வைத்துள்ளார் . இந்த ஒரு செயலுக்காக அவருக்கு பாராட்டுகள் குவிந்த வண்ணம் உள்ளன.

Originality-யை நாம் அறிவின் செயல்பாடாக எடுத்துக் கொள்கிறோம் . ஆனால் திரு. கர்மயோகி அவர்கள் சொல்வதைப் பார்த்தால் , Originality என்பது ஆன்மாவின் விசேஷத்திறன் என்கிறார் . அதாவது மனத்தை நாம் தாண்டி சென்றபின்தான், ஆத்மாவின் Originality செயல்பட ஆரம்பிக்கும் என்று சொல்கிறார். அறிவின் திறனை மிகவும் நம்புகின்ற வெளிநாட்டு அறிஞர்கள் இக்கருத்தை அவ்வளவு சுலபமாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அறிவிலிருந்துதான் Originality பிறக்கிறது ஆத்மாவிற்கு இங்கு வேலையே இல்லை என்றுதான் அவர்கள் அடித்துப் பேசுவார்கள் . அவர்களுடைய எதிர்ப்பை நாம் பொருட்படுத்த வேண்டிய அவசியமில்லை. நம்நாட்டு அறிஞர்களின் செயல்பாட்டை நாம் கவனித்தால் , இது எந்தளவிற்கு உண்மை என்று விளங்கும் . பகவான் சாவித்திரி , லைப் டிவைன் எழுதும்போது அவர் சிந்திக்கவே இல்லை . அவருக்கு தோன்றிய எண்ணங்கள் எல்லாம் அறிவைத் தாண்டிய நிலையிலுள்ள ஒரு ஆன்மீக மௌனத்திலிருந்து எழுந்தவைதான் என்று அன்னை சொல்கிறார் . பகவான் ஒரு ஆன்மீகவாதி எனும்பொழுது அவருக்கு ஆன்மீகத்தில் எழுச்சி இருந்ததில் ஆச்சரியமில்லை என்று நாம் நினைக்கலாம் . ஆனால் கணிதமேதை ராமானுஜம் அவர்களை எடுத்துக் கொள்வோம் . கணிதத்திற்கும் ஆன்மீகத்திற்கும் தொடர்பே கிடையாது. அதனால் முழுக்க முழுக்க ராமானுஜர் அவர்களின் கணிதப் புலமை அவருடைய அறிவின் Originality-யாகத்தான் இருக்க வேண்டும் என்று நாம் பேசலாம். ஆனால் அவரைக் கேட்டால் அவர் வேறு விதமாகத்தான் சொல்கிறார். அவருடைய வாழ்க்கை வரலாற்றில் அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், என் இஷ்ட தெய்வமாகிய நாமகிரியின் அருள் எனக்கு ஒளியாக அவருடைய விக்கிரகத்திலிருந்து கிளம்பி வருகிறது . அது என்தலையினுள் நுழைந்து என் அறிவைத்தூண்டி கணித சூத்திரங்களாக வெளிவருகிறது . நாமகிரி தெய்வத்திடமிருந்து வரும் அருள்ஜோதிதான் என்னுடைய அறிவை இயங்க வைக்கிறதே தவிர என்றைக்குமே என்னறிவின் சொந்த திறனை நான் நம்பியதே இல்லை என்று சொல்லி இருக்கிறார். இப்படி கணித மேதையே அறிவின் Originality-க்குப்பின் ஆத்மாவின்

ஜோதி இருக்கிறது என்று சொல்லும்போது நாம் இவர் சொல்வதைத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டுமே தவிர பகுத்தறிவை நம்புகின்ற மேலைநாட்டு அறிஞர்களின் வாதத்தை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது .

1.**தன்னம்பிக்கையும் தன்னை சார்ந்திருத்தலும் : ( Self-confience and Self-Reliance):** தனித்தன்மையின் முக்கியமான அம்சங்களாக நாம் இவ்விரண்டையும் சொல்லலாம். இந்த இரண்டு அம்சங்களும் இல்லாமல் தனித்தன்மையை கொண்டுள்ள எவரையும் நாம் பார்க்க முடியாது . மேலை நாடுகளின் அபார சுபீட்சத்திற்கு முக்கிய காரணமே அவர்கள் தம்மேல் கொண்டுள்ள அபார தன்னம்பிக்கைதான் . இந்தியா போன்ற நாடுகளில் அந்தளவிற்கு சுபீட்சமில்லாமல் போனதற்கு முக்கியக் காரணம் அதே தன்னம்பிக்கை இங்கு குறைவாக இருப்பதுதான். முப்பது மில்லியன் ஆங்கிலேயர்கள் முந்நூறு மில்லியன் இந்தியர்களை நூறு ஆண்டுகட்கு மேலாக அடிமையாக வைத்திருந்தார்கள் என்றால், அதிலிருந்தே நமக்கு தன்னம்பிக்கை இல்லை என்பது தெரிகிறது . நாலுபேரால் முடியாத காரியம் என்று ஒன்றிருந்தால் அது நம்மாலும் முடியாது என்று நாம் சர்வ சாதாரணமாக எடுத்துக் கொள்கிறோம் . ஆனால், மேலை நாட்டவர்கள் இவ்வாறு சிந்திப்பதே கிடையாது . நாலுபேரால் முடியாவிட்டால் என்ன ? என்னால் முடியும் என்றுதான் அவர்கள் நினைக்கிறார்கள் . இப்படி அவன் நினைப்பதற்குக் காரணமே அவனுக்கு இருக்கின்ற தன்னம்பிக்கைதான். வானத்தில் பறக்கும் விமானத்தை எவரும் கண்டுபிடித்ததில்லை எனறபொழுது அது எவராலும் முடியாது என்று நமக்குத் தோன்றுகிறது . ஆனால் இதேநிலையிலுள்ள அமெரிக்கர்கள் வேறுவிதமாக நினைத்தார்கள் . யாரும் இதுவரையிலும் கண்டுபிடிக்காவிட்டால் என்ன நான் கண்டுபிடித்துக் காட்டுகிறேன் என்று அமெரிக்கர்களான ரைட் சகோதரர்கள் பத்து வருடங்களுக்கு மேலாக பரிசோதனைகள் பலவற்றை செய்து இறுதியில் 1903-ஆம் ஆண்டு மனிதனாலும் பறக்க முடியும் என்று நிரூபித்தார்கள். இத்தகைய தன்னம்பிக்கையை இந்தியர்களிடம் நாம் காண்பதே அரிது . யாரும் இதுவரையில் செய்யாத தொழிலில் நல்ல லாபம் இருக்கிறது . அதனால் நீங்கள் ஏன் செய்யக்கூடாது என்று ஒரு இந்தியரைக் கேட்டால் அது எப்படி யாரும் செய்யாத தொழிலை நான் செய்வது யாரேனும் முதலில் செய்ய வேண்டும் , பின்தான் நான் செய்வேன் என்றும் , யாரும் முயற்சி செய்யாத தொழிலில் நான் எப்படி இறங்குவேன்? அது சரி வராது என்று மறுப்பார்கள்.

கடலூருக்கு அருகில் உள்ள ராமாபுரத்தில் அப்பா அவர்கள் மதர் எஸ்டேட் என்ற பெயர் கொண்ட முந்திரி எஸ்டேட்டை வாங்கினார். அங்கே முந்திரி காடுகளை எல்லாம் அகற்றி பெரிய அளவில் வாழை பயிரிட்டு தண்ணீர் பாய்ச்சுவதற்காக ஆழ்துளைக்கிணறு போட்டார் . அதைப்பின்பற்றி அந்த ஊர் கிராமவாசிகளும் அதையே செய்வார்கள் என்று எதிர்பார்த்தார். ஆனால் யாரும் எதையும் செய்யவில்லை. அவருக்கு ஒன்றும் புரியவில்லை . கிராமவாசிகளை அணுகி "நான் இவ்வளவு ஏக்கரில் வாழை பயிரிட்டுள்ளேனே என்னை பின்பற்றி ஏன் யாரும் வாழை பயிர் செய்யவில்லை என்று இவர் வினவினார்." அதற்கு அவர்கள் அளித்த பதில் என்னவென்றால் , " நீங்கள் வெளியூர்காரர் , பணபலம் மிகுந்தவர். அப்படி இருக்கும்பட்சத்தில் நீங்கள் செய்வதை எல்லாம் நாங்கள் செய்ய முடியுமா ? எங்க ஊர்க்காரர் இதை செய்தால் அதன்பிறகுதான இதை எங்களாலும் செய்ய முடியும் என்று நம்புவோம் " என்று பதிலளித்தார்கள். அதன்பின் அப்பா அவர்கள் அவ்வூர் விவசாயி ஒருவரை பார்த்து அவரை ஒரு bore well போடுமாறும் அது தவறினால் செலவை தானே ஏற்றுக் கொள்வதாகக் கூறி, தைரியப்படுத்தில் அவர் துணிந்து போட்டார். அதில் தண்ணீர் கிடைத்து, அதை வைத்துகொண்டு அவர் வாழை பயிரிட்டதைப் பார்த்தபின் மற்ற விவசாயிகளும் bore well போட்டு வாழை பயிரிட முன்வந்தனர். இந்தளவிற்கு நம்முடைய தன்னம்பிக்கை அடுத்தவரைப் பொருத்துள்ளது . வ.உ.சி. அவர்கள் கப்பல் கம்பெனி ஆரம்பித்த பொழுது அண்ணாமலை செட்டியார் அவர்கள் பல்கலைக்கழகம் ஆரம்பித்தார் . த்மிழ் நாட்டு மக்கள் அனைவரும் அவரை அதிசயமாகப் பார்த்தனர்.

Self confidence மற்றும் Self reliance-க்கும் அமெரிக்கர்களுக்கு நிகராக வேறுயாரும் இருக்க முடியாது . நாம் எல்லாவற்றிற்கும் குடும்பத்தின் ஆதரவையும், உற்றார் உறவினரின் ஆதரவையும், அரசாங்கத்தின் ஆதரவையும் எதிர்பார்த்திருக்கிறோம். ஒரு இந்திய இளைஞன் திருமணம் செய்தால் , வரதட்சணையாக வரும் பணத்தை வைத்துக் கொண்டு ஏதேனும் தொழில் செய்யலாமா என்று பார்ப்பான் . அப்படி வரதட்சணையை வைத்து தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்வது அவனுக்கு மரியாதைக் குறைவாகத் தெரியவில்லை. பட்டப்படிப்பு முடித்து கல்லூரியை விட்டு வெளிவந்தவுடன் அரசாங்கம் தனக்கு வேலை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று எதிர்பார்க்கிறான் . எத்தனையோ விதமான அரசு சலுகைகளை பொதுமக்கள் அனுபவித்துக் கொண்டுள்ளனர் . விவசாயிகள் கடன் வாங்கிப் பயிர் செய்தால் , கடனை திருப்பித்தராமல் அரசு கடனை தள்ளுபடி செய்யுமா என்று ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள் . ஆனால், இதே விஷயங்களில் அமெரிக்கர்கள் நம்மைப்போல் நடந்துக் கொள்வதேயில்லை . அவர்கள் யாருடைய ஆதரவையும் நம்பி அவர்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதேயில்லை . தன்னுடைய சொந்த உழைப்பு, திறமை இவைகளை மட்டுமே நம்புவார்கள் . வரதட்சணை கோரிக்கை வைப்பது அமெரிக்க இளைஞர்கள் அறியாத ஒன்றாகும் . நமக்கு நிதியுதவி தேவைப்பட்டால் , நாம் தயங்காமல் உற்றார் , உறவினர்களிடம் வாங்கிக் கொள்கிறோம் . ஆனால் அமெரிக்கர்கள் இவ்வாறு செய்வதேயில்லை . நாம் லட்ச ரூபாய் ஒருவரிடம் கடன் வாங்கும்போது அவர்கள் உறவினர்களிடம் நூறு டாலர் கடன் வாங்க மிகவும் தயங்குவார்கள். தந்தையார் கோடீஸ்வரராக இருந்தாலும் , பிள்ளை தனக்கு அவர் இலவசமாக ஒரு தொழில் அமைத்துத் தரவேண்டும் என்று எதிர்பார்ப்பதில்லை . கடனாக ஒரு தொகையை வாங்கி சொந்தமாக ஒரு தொழிலை அமைத்து அதில் லாபம் பார்த்து , அந்த கடனை திருப்பித்தர வேண்டும் என்றுதான் எந்த அமெரிக்க இளைஞனும் விரும்புவான் . நம் நாட்டில் தொழில் முனைவோருக்கு அரசாங்கம் வங்கிகளின் மூலம் பலவிதமான சலுகைகளை வழங்குகிறது. ஐந்து கோடி ரூபாய்க்கு ஒருவர் தொழில் திட்டம் தீட்டினால்கூட திட்டம் தீட்டியவர் 10% margin கொடுத்தால் போதும் மீதி தொகையை வங்கி கொடுக்கும் என்ற அளவிற்கு நம் நாட்டில் தொழில் முனைவோருக்கு வங்கிகளின் ஆதரவு உள்ளது. இது அமெரிக்கர்கள் கேட்டறியாத ஒன்று . இப்படி ஒரு ஐந்து கோடி ரூபாய்க்கு திட்டம் தீட்டி எந்த ஒரு அமெரிக்க இளைஞரும் எந்த ஒரு அமெரிக்க வங்கியிலும் 10% margin கொடுத்து மீதி தொகை கடனாக வாங்க முடியாது. அவர் தன்னுடைய சொந்த திறமையில் சிறிய அளவில் தொழில் ஆரம்பித்துக் கொள்ள வேண்டும். அந்த தொழிலை அவர் படிப்படியாக வளர்த்து , ஐந்து கோடி பெறுமான அளவிற்கு அதை விரிவுபடுத்த வேண்டுமே தவிர நேரடியாக வங்கியின் ஆதரவை வைத்துகொண்டு பெரிதாக எதையும் தொடங்கிவிட முடியாது.

நம்மிடம் காணப்படாத self-reilanceஇந்தளவிற்கு ஏன் அமெரிக்கர்களிடம் காணப்படுகிறது என்பதையும் நாம் ஆராயவேண்டும். அடிப்படையில் இந்தியர்களின் வாழ்க்கை கூட்டு வாழ்க்கை. அதாவது collective life. அப்படிப்பட்ட வாழ்க்கையை நாம் வாழும்பொழுது சிரமமோ நெருக்கடியோ ஆபத்தோ வந்தால் , ஆதரவு தர உற்றார் உறவினர்கள் இருக்கிறார்கள் . ஜாதி சங்கங்கள் உள்ளன .பொதுவாக உள்ளூர் ஆதரவு உள்ளது என்று நாம் நம்பிக் கொண்டிருக்கிறோம். வசதி குறைந்த ஒருவர் தன் மகளுக்கு எப்படி திருமணம் செய்வது என்று கவலைப்படும் பொழுதெல்லாம் அவர் அண்ணன் வசதி மிகுந்தவராக இருந்தால் , நான் இருக்கிறேன் பார்த்துக் கொள்கிறேன் கவலை வேண்டாம் என்று சொல்வதுண்டு . கிராமத்தில் ஒரு விவசாயி நிலத்தில் அத்துமீறி ஒருவர் நுழைந்தால் , மாடு விட்டு மேய்த்தால் , அவருடைய நிலத்தின் எல்லையை இரண்டடி இவருடைய நிலத்திற்குள் கொண்டுவர முயற்சி செய்தால் , அதன் காரணமாக தகறாறு எழும்போது இவருக்கு ஆதரவாக செயல்படுவதற்கு அதே கிராமத்திலுள்ள உற்றார் உறவினர்களைக் கூப்பிடுவதுண்டு. ஆபத்திற்கு உதவ உற்றார்கள் இருக்கிறார்கள் என்று தெரியும்போது , மற்றவர்களும் வீண் தகராறை எழுப்ப மாட்டார்கள் . ஒருவர் உடம்பிற்கு வந்து படுத்து விட்டால் ,

மருத்துவமனையில் admit செய்து குணமாகும்வரை கூட இருந்து பார்த்துக் கொள்ள உற்றார் உறவினர்கள் உதவிக்கு வருவார்கள். இப்படிபட்ட உறவினர்கள் ஆதரவு என்பது அமெரிக்கர்கள் கேட்டறியாத ஒன்று. 16-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர்கள் அமேரிக்கா வந்து குடியேறியபோது அந்த நாடு வெறும் வனாந்திரமாகத்தான் இருந்தது. அந்நிலையில் குடியேறியவர்கள் எல்லா வேலைகளையும் தாங்களேதான் செய்ய வேண்டும் என்ற கட்டாயத்தில் இருந்தனர். பயிர் செய்தால் அதை அறுவடை செய்யும் வரை பயிரை பாதுகாக்க உதவிக்கு ஆட்கள் இல்லை. திருட்டோ, கொள்ளையோ நடந்தால் பாதுகாப்புத்தர காவல்நிலையங்கள் இல்லை. தன்னையும், தன் உடமையையும் பாதுகாத்துக் கொள்ள அவரவர் துப்பாக்கியும் கத்தியும் வைத்திருக்க வேண்டியதாயிற்று. உடம்பிற்கு வந்து படுத்துவிட்டால் உதவுவதற்கும் ஆட்கள் இல்லை. இப்படிப்பட்ட நிலையில் வாழ்ந்து பழகிய அமெரிக்கர்களுக்கு இது நன்றாகப் பழகியபடியால், இதையே வழக்கமாக வளர்த்துக் கொண்டுவிட்டனர். இன்று அந்நாடு செல்வச் செழிப்புடன் இருந்தாலும், நாட்டின் ஆரம்பகால வாழ்க்கை இப்படி இருந்ததால், இதனால் ஏற்பட்ட பழக்கங்கள் நன்கு வேரூன்றி விட்டன. நம் நாட்டினருக்கு ஆரம்பத்திலிருந்தே கூட்டுக் குடும்ப வாழ்க்கை பழகிவிட்டதால், அப்போதே நாம் கற்றுக்கொள்ளாத self reliance இன்று நகர வாழ்க்கை ஏற்பட்டபின்னும் அவரவர் வருமானத்திற்கு அவரவரே பொறுப்பு என்ற நிலைமை உருவாகியபின்னரும், பழைய பழக்க வழக்கங்கள் இன்னும் விடாமல் தொடர்கின்றன. நம் நாட்டு பெண்கள் சிலருக்கு இன்னும் சொந்தமாக முடிவு எடுக்கத் தெரியாது. எல்லாவற்றிக்கும் கணவனையே முடிவு எடுக்கச் சொல்வதால், எதற்கு எடுத்தாலும் அவரையே ஒரு வார்த்தை கேட்க வேண்டும் என்பதை நாம் பார்க்கிறோம். இந்தியாவிலிருந்து சென்று அமெரிக்காவில் வசிக்கும் பல பெண்களுக்கு இப்பழக்கம் இருப்பதால் இது அமெரிக்கர்களுக்கு அதிருப்தியை தருகிறது. அங்கே வசிக்கும் இந்திய பெண் ஒருவர் ஒரு பல் மருத்துவமனைக்குப் போனாராம். இவருடைய பல்லை பரிசோதித்த மருத்துவர் இவருடைய ஒரு பல் வீணாகிவிட்டது. அதை பிடுங்கிவிட்டு வேறு பல் பொருத்துகிறேன் அதற்கு $2000 ஆகும், சம்மதமா என்று கேட்டார். அதற்கு அவரால் உடனடியாக பதில் சொல்லவே முடியவில்லை. தன கணவர் இதற்கு அனுமதிப்பாரா என்ற கேள்விதான் வந்தது. ஆகவே அவர் தயக்கத்துடன் தன கணவரை ஒரு வார்த்தை கேட்டபின் சொல்கிறேன், இரண்டு நாட்கள் அவகாசம் கொடுங்கள் என்று கேட்டார். அந்த அமெரிக்க டாக்டருக்கு ஒன்றுமே புரியவில்லை. மிகவும் ஆச்சரியப்பட்டுவிட்டாராம். இதற்கு நேர் எதிர்மாறான அனுபவத்தை வேலைக்கார பெண்ணின் கோணத்திலிருந்து பார்த்தால், இந்திய பெண்ணிற்கும், வெள்ளைக்கார பெண்ணிற்குமுள்ள வித்தியாசம் தெரியும். P&P-யில் எலிசபெத்தையும், டார்சியையும் எடுத்துக் கொள்வோம். அவள் ஆரம்பத்தில் அவனை நிராகரிக்கிறாள். அது அவளாக எடுத்த சொந்த முடிவு. அவனுடைய திருமண வாய்ப்பை ஏற்க வேண்டுமா அல்லது நிராகரிக்க வேண்டுமா என்று யாரையும் அவள் கேட்கவில்லை. அப்படி மறுத்தபின்னும் யாரிடமும் அவள் சொல்லவுமில்லை. இது அவள் சொந்த விஷயம் என்று மௌனமாக இருந்தாள். அதே டார்சி இரண்டாம்முறை மீண்டும் திருமண வாய்ப்பு தரும்போது சந்தோஷமாக ஏற்றுக் கொள்கிறாள். அந்த நேரத்திலும் தாய், தந்தையை கேட்க கால அவகாசம் எதுவும் அவள் கேட்கவில்லை. முன்பு வேண்டாம் என்பது அவள் சொந்த முடிவு. இப்போது வேண்டும் என்பதும் அவள் சொந்த முடிவு. இப்படி தன் விஷயத்தில் தன்னை சார்ந்திருப்பதே தனித்தன்மைக்கு ஒரு முக்கியமான அடையாளமாகும்

3. இப்போது அடுத்த கருத்திற்கு வருவோம். தனித்தன்மை மிகுந்தவரிடம் **Unconventional Behaviour** -ஐ நிறையவே பார்க்கலாம். நாலு பேரைப்போல் இவரும் நடந்துகொண்டால், எப்படி இவர்கள் தனியாகத் தெரிவார்கள். இவர்கள் தனியாகத் தெரியவேண்டும் என்றால், இவர்களுடைய செயல்பாடும் அந்தளவிற்கு வித்தியாசமாக தெரிய வேண்டும். ஆகவேதான் unconventional behaviour இவர்களுக்கு ஒரு அடையாள முத்திரையாகிவிட்டது. இவர்கள் நாலுபேருடன் சேர்ந்திருந்தாலும் அவர்கள்போல் சிந்திக்கவோ, செயல்படவோ மாட்டார்கள். சற்று வித்தியாசமாகவே இருப்பார்கள். அந்த வித்தியாசம் பல வகைகளில்

வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும் . ஊரில் எல்லா விவசாயிகளும் நெல் பயிரிட்டால் , தனித்தன்மை மிகுந்த ஒரு விவசாயி இருந்தால் அவர் மட்டும் தன் வயலில் வாழை அல்லது கரும்பு போடுவார் . அல்லது மிக வித்தியாசமாக ரோஜா அல்லது முல்லை என்று பூச்செடிகளை வளர்ப்பார். நாங்கள் எல்லாம் நெல் போடும்போது நீங்கள் ஏன் இவ்வாறு வித்தியாசமாக செய்கிறீர்கள் என்று மற்றவர்கள் கேட்டால் வாழை அல்லது கரும்பில் நெல்லைவிட லாபம் அதிகம் என்பது உங்களுக்குத் தெரியாது , அது எனக்குத் தெரியும் என்று தைரியமாக பதிலளிப்பார். சம்பளத்திற்கு வேலை செய்வதையே வழக்கமாக கொண்டுள்ள குடும்பத்தில் இவர் பிறந்தால், இவர் மட்டும் வித்தியாசமாக முடிவு எடுப்பார் . அதாவது salaried employment - க்கு போகாமல் self-employment-க்கு முயற்சி செய்வார் . தம்முடைய தாத்தா காலத்திலிருந்தே அவர் குடும்பத்தில் எவரும் சொந்த தொழில் செய்தது கிடையாது . உனக்கு ஏன் வித்தியாசமாகத் தோன்றுகிறது என்று கேட்டால், அது அப்படிதான் நீங்கள் செய்வதுபோல் நான் செய்யவேண்டும் என்ற கட்டாயமில்லை என்பார். வேலை செய்வதைவிட சொந்த தொழிலில் அதிக வருமானமுள்ளது என்று எனக்கு தோன்றுகிறது, அதற்கு நான் ஒரு முயற்சி எடுக்கிறேன், ஏன் தடுக்கிறீர்கள் என்பார் . ஆன்மீகத்திலும் இப்படிபட்ட unconventional behaviour நிறைய உண்டு. புத்த பகவான் முதலில் இதை நிரூபித்துக் காட்டினார் . வேதங்கள் கூறுவதின் அதிகாரத்தையே ஏற்று பழகிய நம் நாட்டில் வேதங்கள் சொல்வதை உதறிய முதல் மகான் இவர்தான். ஆத்மாவை மையமாக வைத்துதான் ஞானயோகம், பக்தியோகம், ஹடயோகம் என்றிவைகளை எல்லாம் உருவானபோது இவர் திடீரென்று ஆத்மாவே கிடையாது . அவரவர் செய்யும் கர்மம்தான் அவரவர் வாழ்க்கையில் நிலைத்து நிற்கிறது. கர்ம பந்தத்திலிருந்து விடுபட்டு நிர்வாணமடைய உண்டான வழியை தேடுவதே என் வேலை என்று பகிங்கரமாக அறிவித்தார் . இப்படி வேதங்களின் அதிகாரத்தை பகிங்கரமாக நிராகரித்து unconventional behaviour-க்கு முதன்முதலாக ஆன்மீகத்தில் வித்திட்டவர் இவர்தான். இவருக்குப்பின் ஆன்மீகத்தில் பெரிய அளவில் வித்தியாசமாக தன் கருத்தை புகுத்தி தன் தனித்தன்மையை நிருபித்தவர் பகவான் என்றுதான் சொல்ல வேண்டும் . வாழ்க்கையை உதறித் தள்ளுவதையே குறியாக உள்ள இந்திய ஆன்மீகத்தில் அவ்வாறு வாழ்க்கையை உதறாமல் திருவுருமாற்றம் செய்ய வேண்டும் என்ற வித்தியாசமான முடிவை எடுத்தவர் இவர்தான் . அன்னையை எடுத்துக் கொண்டாலும் , அவரளவில் ஒரு வித்தியாசமான வாழ்க்கையை அவரும் வாழ்ந்தார் . அவர் பெற்றோர் கடவுள் நம்பிக்கையே இல்லாதவர்கள் . அவர் முதலில் குருவாக ஏற்ற தியான் என்பவர் ஒரு பெரிய அசுர சக்தி என்று தெரிந்தும் அன்னை அவரிடம் தன் ஆன்மீக பயிற்சியை தொடர்ந்தார் . அவர் கணவர் ரிச்சர்டும் ஒரு அசுர சக்தியாகத்தான் இருந்தார். அது தெரிந்தும் அவரை திருவுருமாற்றம் செய்ய வேண்டும் என்பதற்காகவே திருமண பந்தத்தில் அவருடன் இணைந்தார் . வெளிநாட்டவர்களுக்கு தம்முடைய புற வாழ்க்கையையும், தம்முடைய அக வாழ்க்கையையும் இணைத்துப் பார்க்கவே தெரியாது. அவருடைய வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகள், அவர் வாழ்க்கை அமைந்த விதம் எல்லாம் அவரின் அக உணர்வின் எதிரொலி என்ற விஷயமே அவர்கள் அறியாத ஒரு கருத்தாகும் . ஆனால் அப்படிப்பட்ட வெளிநாட்டு கலாச்சாரத்தில் பிறந்து வளர்ந்த அன்னை நம்முடைய வெளிவாழ்க்கை நம் உள்வாழ்க்கையின் நேரடி பிரதிபலிப்பு என்ற ஒரு புரட்சிகரமான கருத்தை தைரியமாகவே வெளியிட்டார் . பெண்களுக்கு ஆன்மீகத்தில் உரிமையே கொடுக்காத நம் நாட்டிற்கு வந்து ஒரு ஆசிரமத்தை நிறுவி பெண்களுக்கு சம உரிமை அளித்த முதல் ஆன்மீகவாதி இவராவார்.

4. தனித்தன்மை உள்ளவர்கள் திடமான முடிவுகளை எடுப்பார்கள் . **Strong Convictions** : அதாவது அவர்கள் எடுத்த முடிவிலிருந்து சுலபமாக மாறமாட்டார்கள். ஊராரின் விமர்சனகளைப்பற்றியும் கவலையும் படவே மாட்டார்கள். தனித்தன்மைக்கு மிகவும் அவசியமான பண்புகளில் இதுவும் ஒன்று . நாலு பேர் என்ன சொல்வார்கள் என்று கவலைப்படுவோர்கள் எவரும் அவரவர் எடுக்கும் முடிவில் திடமாகவே இருக்க முடியாது. உதாரணமாக ஜாதிவிட்டு வேறொரு ஜாதியில் கலப்புத் திருமணம் செய்துகொள்ள ஓரளவிற்கு

தனித்தன்மை வேண்டும் . ஆகவே அவ்வாறு காதல் திருமணம் செய்து கொள்ள விரும்பும் இருவர் குடும்பத்தார் எதிர்ப்பார்கள் , ஜாதிக்காரர்கள் ஒதுக்கி வைப்பார்கள் என்றெல்லாம் நினைத்து பயந்தால் , அவர்களால் காதல் திருமணம் செய்து கொள்ளவே முடியாது . அம்மாதிரியே முறைதான் முக்கியம் , ஆதாயம் முக்கியமில்லை என்று பேசுபவரும் முறையை வலியுறுத்தும் இடங்களில் உறுதியாக நிற்கத்தான் வேண்டும். P & P -யில் எலிசபெத் பென்னட்டிடம் இதைக் காணலாம் . அவளுடைய சகோதரி ஜேனின் திருமணத்தில் டார்சி குறுக்கிட்டது அவளுக்கு முறையற்ற செயலாகப்பட்டுவிட்டது . அந்த முறையற்ற செயலை செய்தவன் ஒரு பிரபு வம்சத்தைச் சேர்ந்தவன் , கோடீஸ்வரன் என்பதால் மட்டும் அவனுடைய முறையற்ற செயலை மன்னித்து , அவனின் திருமண proposal-ஐ அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. லிடியா விஷயத்தில் அவன் குடும்ப மானத்தைக் காப்பாற்றி இருக்காவிட்டால் , அவன் மீண்டும் எத்தனை முறைகள் proposal கொடுத்திருந்தாலும் , அதை அவள் நிராகரித்துதான் இருப்பாள் . சமூகத்தை சீர்திருத்த முனைபவர்களும் இம்மாதிரி கொள்கை பிடிப்புடன்தான் இருப்பார்கள் . காந்திஜியின் அஹிம்சை நாட்டிற்கு விடுதலை வாங்கித்தராது என்று எத்தனையோ பேர்கள் அவநம்பிக்கை தெரிவித்த பின்பும்கூட அவர் அஹிம்சையின்மேல் வைத்திருந்த நம்பிக்கையை இழக்கவில்லை . அவர் லண்டனில் வக்கீல் படிப்புப் படித்தவர் . நாகரீகமாக உடை உடுத்திக்கொண்டு நீதிமன்றங்களில் practice செய்யக் கூடியவர். காங்கிரஸ் பார்ட்டியில் தலைமை பதவியில் இருந்ததால் , ஆங்கிலேய அதிகாரிகளை பார்த்துப் பேசும் வாய்ப்புகள் அவருக்கு நிறையவே இருந்தது . இருந்தாலும், ஏழை விவசாயிகள் இருந்த நாடு இது . அவர்களோடு நான் ஐக்கியமாக வேண்டும் என்றால் , அவர்களைப்போல் வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டுதான் இருக்க வேண்டும் என்றொரு முடிவு எடுத்தார் . அம்முடிவிலிருந்து அவர் மாறவே இல்லை. ஆங்கில வைசிராய் மௌன்ட்பேட்டன் அவர்களை வைசிராய் மாளிகையில் சந்திக்க வேண்டியிருந்தும்கூட இப்படி வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு மேலே சட்டைக்குப் பதிலாக ஒரு துண்டைப் போர்த்திகொண்டுதான் வந்தார் . அவர் நம் நாட்டில்தான் இப்படி செய்தார் என்று எண்ணலாம் . லண்டன் சென்று ஐந்தாம் ஜார்ஜ் அரசரை பார்த்த பொழுதும்கூட இப்படித்தான் போனார் . பாரதியாரை எடுத்துகொண்டால், அவரும் ஒரு சமூக சீர்திருத்தவாதிதான் . அதனால், ஊராரின் கிண்டல் , கேலி பேச்சிற்கும் ஆளானார். ஆனால் அதைப்பற்றி அவர் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. 1910-ஆம் ஆண்டு காலக்கட்டத்தில் பிராமணரல்லாத வேறு ஜாதியினருக்கு வேதம் கற்றுக் கொடுத்தல் என்பது பெரிய பாவ காரியமாகப்பட்டது. ஆனால் இவரோ சேரியிலிருந்து சிறுவர்களை வரவழைத்து , அவர்களுக்கு பூணூல் அணிவித்து வேதமும் கற்றுக் கொடுத்தார் . "ஜாதிகள் இல்லையடி பாப்பா, குல தாழ்ச்சி, உயர்வு பார்த்தல் பாவமடி பாப்பா" என்று தன்னுடைய பாப்பாப் பாட்டுகளில் அந்த நாளிலேயே பாடியுள்ளார்.

கொள்கை பிடிப்பு சரியாகவும் இருக்கலாம் , மாறாகத் தவறாகவுமிருக்கலாம். இங்கே நாம் காண வேண்டியது கொள்கை பிடிப்புத்தானே தானே தவிர அது சரியா ? தவறா? என்பதில்லை. நிறைய பேர்கள் செய்கின்ற தவறில் மனமாற்றத்திற்கு இடமின்றி தீவிரமாக இருப்பதைப் பார்க்கிறோம் . பாகிஸ்தானை எடுத்துக் கொள்ளுங்கள் . காஷ்மீர் தனக்கு சொந்தம் என்று அது நினைக்கிறது . 1947 அக்டோபரிலேயே பட்டானிய வீரர்களை அனுப்பி , காஷ்மீரைக் கைப்பற்ற முயற்சி செய்தது . அம்முயற்சி பலிக்காமல் போனாலும், தன் கொள்கையிலிருந்து அது மாறவே இல்லை . கடந்த 500 வருடங்களுக்கு மேலாக பயங்கரவாதிகளை அனுப்பி , கலவரங்களை உண்டுபண்ணி காஷ்மீரை நிலைகுலைய செய்கிறது . இதேமாதிரியான தவறான கொள்கை பிடிப்பை நாம் பல இடங்களில் பார்க்கலாம் . அணு ஆயுதங்களை கொண்ட நாடுகள் இந்த ஆயுதங்கள் பேராபத்தை விளைவிக்கக் கூடியவை என்று நன்றாகத் தெரிந்திருந்தாலும், அந்த ஆயுதங்களைக் கைவிடவே மறுக்கின்றன . மேலும் தாங்கள் இதனை வைத்துக் கொள்ளலாம், மற்ற நாடுகள்தான் வைத்துக் கொள்ளக்கூடாதென்று வற்புறுத்தவும் செய்கின்றன . யூதர்களும், பாலஸ்தீனர்களும் இதைத்தான் செய்கின்றனர் . இரு தரப்பினரும் ஜெருசலம் தனக்குத்தான்

சொந்தம் என்று உரிமைக் கொண்டாடிக்கொண்டு இஸ்ரேல் உருவான நாள்முதல் தகராறு செய்துகொண்டுதான் இருக்கின்றனர் . ஆகவே நாம் கொள்கைப் பிடிப்பு என்பதைக் கருதும்போது இமமாதிரியான தவறான கொள்கைப் பிடிப்புகளை நினைத்துப் பார்க்கலாம்.

5. **Leadership**: தனித்தன்மை மிகுந்தவர்களுக்கு capacity for leadership நிறையவே இருக்கும் . தனித்தன்மை மிகுந்தவர்கள் எந்தவொரு சூழ்நிலையையும் ஒரு வித்தியாசமான கண்ணோட்டத்தில்தான் பார்ப்பார்கள் . அப்படி வித்தியாசமாகப் பார்க்கும்பொழுது பிரச்சனைக்கு அவர்களுக்கு ஒரு புதுவிடை கிடைக்கும் . இப்படி நாலு பேருக்குத் தோன்றாத ஒரு வழி இவர்களுக்குத் தோன்றுவதால் , இவர்களுடைய தலைமையை நாடி மற்றவர்கள் வருவார்கள் . இது சிறிய அளவிலும் , பெரிய அளவிலும் நடக்கும் . அண்ணா ஹசாரே அவர்களை எடுத்துக் கொண்டால் , குஜராத்திலுள்ள ஒரு கிராமம்தான் அவரின் சொந்த ஊர் . அங்கே விவசாய நிலங்களிருந்தும் யாரும் விவசாயமே செய்யாமல் சாராயம் காய்ச்சி விற்று பிழைப்பை நடத்தினார்கள். ஏன் இந்த நிலைமை என்று விசாரித்தால், மலையடிவாரமான கிராமம், மலையில் பெய்கின்ற நீரெல்லாம் மலைச்சரிவில் வழிந்தோடிவிடும். மற்றபடி ஆறு, ஏரி போன்ற நீர் நிலைகள் பாசனத்திற்கு இல்லாமல் இருந்தது. இதனை காரணம்காட்டி மக்கள் சாராயம் காய்ச்சுவதற்கு மாறிவிட்டதை அண்ணா ஹசாரே ஏற்க மறுத்தார். அவருக்கு வித்தியாசமாக ஒரு எண்ணம் தோன்றியது. மலையடிவாரத்தைச் சுற்றிலும் ஏன் ஒரு அணைக் கட்டக்கூடாது. அவ்வாறு செய்யும்பொழுது மலையிலிருந்து வரும் தண்ணீர் அணையில் தேங்கி நிற்கும். அவ்வாறு நிற்பதால், தண்ணீரெல்லாம் பூமியுள் இறங்கும். இதனால் நிலத்தடி நீர் மட்டம் உயரும். அப்பட்சத்தில் போர் கிணறு போட்டால் விவசாயத்திற்கு தண்ணீர் கிடைக்கும் என்று கணக்கிட்டார். இதற்கான, நிதி, ஆட்கள் உதவியை அந்த ஊர் மக்களிடமிருந்தே திரட்டினார். அவர் எடுத்த முயற்சி பலித்தது. அவர் எதிர்பார்த்ததுபோலவே நிலத்தடி நீர் மட்டமும் உயர்ந்து, போர் கிணறு போட்டவர்களுக்கு தண்ணீர் கிடைத்தது. தண்ணீர் கிடைக்கிறது என்று தெரிந்தவுடன் மக்கள் வழக்கமாக செய்கின்ற சாராயம் காய்ச்சும் வேலையை கைவிட்டு விவசாயத்திற்கு மாறினார்கள். இப்படி வித்தியாசமாக சிந்தித்ததால், ஹசாரே அவர்கள் அவருடைய சொந்த ஊருக்கு தலைவரானார். அதோடு மட்டும் நிற்கவில்லை. ஊழலை எதிர்க்க லோக்பால் தடுப்புச் சட்டம் கொண்டு வரவேண்டும் என்றொரு ஊழல் எதிர்ப்பு இயக்கத்தைத் துவக்கி அதற்கும் தலைவராக இருக்கிறார்.

இப்படி வித்தியாசமான அணுகுமுறையைக் கொண்டு வருபவர்கள் எல்லாம் அவரவர் இருக்கும் துறையில் தலைமை ஸ்தானத்திற்கு வந்து விடுகிறார்கள். வாழ்க்கையை துறக்க வேண்டாம் அதற்கு பதில் திருவுருமாற்றம் செய்யலாம் என்று ஒரு வித்தியாசமான அணுகுமுறையை கொண்டுவந்ததால், பகவான் புதிய ஆன்மீகத்திற்கு தலைவரானார். உலக அமைதியைக் காக்க ஆரோவில் நிறுவி அதன் வழியே அன்னை ஆன்மீக தலைமை ஸ்தானத்தை அடைந்தார். இம்மாதிரி எந்த துறை எடுத்துக் கொண்டாலும் வித்தியாசமான அணுகுமுறைகள் தனித்தன்மை மிகுந்தவர்களை தலைமை ஸ்தானத்திற்குக் கொண்டு வந்துவிடுகிறது. காலம் சென்ற முன்னாள் மத்திய அமைச்சர் திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் இதற்கு நல்ல உதாரணமாகும். உணவு பற்றாக்குறையின் காரணமாக வெளிநாட்டு இறக்குமதிகளையே இந்தியா நம்பியிருந்த காலத்தில் சுப்ரமணியம் அவர்கள் வித்தியாசமாக நினைத்தார். ஏன் உணவு உற்பத்தியில் நாம் தன்னிறைவு எட்டக்கூடாது அதற்கு ஏன் நாம் முழு முயற்சி எடுக்கக் கூடாது என்று சிந்தித்தவர் அதன் விளைவாக பசுமைப் புரட்சியை துவங்கினார். அது வெற்றி பெற்ற பொழுது பசுமைப் புரட்சியின் தந்தை என்று பட்டம் சூட்டப் பெற்றார். சுதந்திரத்திற்கு முன்னால், மைசூர் சாம்ராஜ்ஜியத்தின் திவானாக இருந்த சர். விஸ்வேஸ்வரய்யா அவர்கள் மைசூர் மாநிலத்தை தொழில் மையமாக்குவதில் வல்லமைப் பெற்றிருந்தார். திவான் என்ற முறையில் அவரை சந்திக்க ஏராளமானவர்கள் வருவார்கள். அப்படி வருபவர்களில் தொழில் திறமையுள்ளவர்களை அடையாளம் கண்டுபிடித்து, அவர்களை ஊக்குவித்து தொழிலதிபர்களாக தலையெடுக்க சொல்வாராம். நாளடைவில் இது என்னவாயிற்று என்றால் பெங்களூர் மற்றும் மைசூர் மாநிலங்களில் நடக்கின்ற எந்த பெரிய தொழிற்சாலையை எடுத்துக் கொண்டாலும், அதன் பின்னணியைப் போய் பார்த்தால், அதை ஆரம்பிக்க சொன்னவர் விஸ்வேஸ்வரய்யா என்று தெரியும். தேசிய அளவில் இத்திறமை அவரை தலைவராக்கியது.

இம்மாதிரியே சர்வதேச அளவில் வித்தியாசமான அணுகுமுறைகள் சர்வதேச தொழிற் தலைவர்களை உருவாகியுள்ளது.

ஆட்டோ மொபைல் மார்க்கெட்டுக்கு வந்த பொழுது விலை மிக உயர்வாகவும் செல்வந்தர்கள் மட்டுமே வாங்கக் கூடியதாகவும்தான் இருந்தது.ஹென்றி போர்டு அவர்கள் இதைக் கவனித்தார். இந்நிலை அவருக்குப் பிடிக்கவில்லை. எல்லா குடும்பத்தினரும் வாங்கக் கூடிய அளவிற்கு கார் விலை cheap-ஆக இருக்க வேண்டும் என்று விரும்பினார். அதற்குண்டான வழிமுறைகள் இருக்கின்றதா என்றும் தேடிக் கொண்டிருந்தார். இந்த அணுகு முறையே வித்தியாசமாகத்தான் இருந்தது. Assemble Line Production இதற்கு உதவும் என்று க்ண்டுப்பிடித்தார். அவருடைய கார் கம்பெனியிலேயே Assemble Line Production- ஐ கொண்டு வந்தார். அவர் கம்பெனியில் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்கள் வாங்கக் கூடிய அளவிற்கு அவர் தயாரித்த காரின் விலை இறங்கியது. உடனேயே பிரபலம் அடைந்தார். ஆயிரக் கணக்கில் மாடல் " T" கார்களை தயாரித்து விற்று பெரும் கோடீஸ்வரரானார். கார் உற்பத்தித் துறையில் அவரை தலைமை ஸ்தானத்திற்கு கொண்டு வந்தது Assemble Line Production என்ற வித்தியாசமான உற்பத்தி அணுகுமுறையாகும். பொதுவாக அக்காலத்தில் கார் ஒரு status symbol- ஆகத்தான் இருந்தது. Status symbol என்றபட்சத்தில் அது விலை உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்றுதான் பிரியப்படுவார்கள். எல்லோரும் ஒரு பொருளை வைத்திருந்தால், அது எப்படி status symbol-ஆக இருக்க முடியும். இந்த இடத்தில்தான் அவர் வித்தியாசமாக சிந்தித்தார். ஏன் கார் எனபது ஒரு status symbol-ஆக ஒரு சிலருடைய கையில் மட்டும் இருக்க வேண்டும். "இந்நாட்டில் எல்லோருமே காரை ஓட்டி மகிழலாமே அதற்கு நாம் என்ன செய்ய முடியும்" என்று யோசித்தார். இப்படி பணக்காரர்களுக்கு கிடைத்தது பணக்காரர்களுடனேயே நிற்காமல் மற்றவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற வித்தியாசமான எண்ணம்தான் அவரை Auto Mobile துறையில் தலைவராக்கியது.

இப்படி வித்தியாசமான உற்பத்தி அணுகுறை ஒருவரை தொழில் துறையில் தலைவராக்க முடியும் என்றால் வித்தியாசமான மார்க்கெட்டில் அணுகுமுறையும் அதை கையாள்பவரை அவர் இருக்கும் துறையில் தலைமை ஸ்தானத்திற்கு உயர்த்தும். Steve Jobs அவர்கள் இதற்கு நல்ல உதாரணம். பொதுவாக எந்த தொழிலிலுமே இலாபத்தைத்தான் பிரதானமாக கருதுவார்கள். **Mobile phone business**–சிலும் அப்படித்தான் இருந்தது. Steve Jobs தலைமை பொறுப்பேற்றிருந்த Apple Computers Mobile Phone துறையில் உள்ளே நுழைந்தது. I phone மாடல் உருவாகிக் கொண்டிருப்பதாக விளம்பரம் செய்தார்கள். அப்பொழுது Jobs அவர்கள் வித்தியாசமான முடிவை எடுத்தார். தனக்கு லாபம் முக்கியமில்லை, மக்களுக்கு நாம் கொண்டு வரும் Iphone மாடல் திருப்தி அளிக்க வேண்டும். அவர்களுடைய திருப்தி தனக்கு கிடைக்கும் லாபத்தைவிட முக்கியம் என்பதுதான் அந்த முடிவு. இதை நிரூபிக்கும் வகையில் எல்லா வகையிலும் customer–களுக்கு திருப்தியை வழங்கக் கூடிய மாடல் ஒன்றை அவர் மார்க்கெட்டிற்குக் கொண்டு வந்தார். மாடல் அமோக வெற்றி பெற்றது. Jobs அவர்களும் வரலாறு காணாத பிரபலம் அடைந்தார்.

மேற்கூறிய விஷயங்களை எல்லாம் சுருக்கிச் சொன்னால், தனித்தன்மை மிகுந்தவர்களிடம் ஐந்து பிரதான அடையாளங்கள் இருக்கும் என்று தெரிகிறது. முதலாவதாக originality, இரண்டாவதாக தன்னம்பிக்கையும் தன்னயே நம்பி இருத்தலும், மூன்றாவது Unconventional Behaviour, நான்காவது திடமான முடிவுகள், ஐந்தாவது Leadership இவை யாரிடம் எல்லாம் தென்படுகிறதோ அவர் கண்டிப்பாக தனித்தன்மை மிகுந்தவர் என்று நாம் எடுத்துக் கொள்ளலாம். இந்நாள்வரை தனித்தன்மை இல்லாதவர்களும் இந்த அடையாளங்களை வளர்த்துக் கொண்டார் என்றால், அந்தளவிற்கு அவர்களுக்கு தனித்தன்மை வளரும் என்றும் எதிர்பார்க்கலாம்.

--------

மூலம் ஸ்ரீ கர்மயோகி

விரிவாக்கம் திரு. N. அசோகன்

சொற்பொழிவாற்றியவர் திரு. N. அசோகன்

சொற்பொழிவாற்றிய தேதி 24 / 04 / 2015